**இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழக சேமலாப நிதியம் - 2014**

இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 74 ஆம் இலக்க இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தீர்மானித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு

நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 2 இன் பிரகாரம் ஆண்டினுள் காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் என்பவற்றை பிரதிபலிக்கும் வகையில் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) காசுப் பாய்ச்சலொன்றல்லாத பங்களிப்புக் கணக்கிற்காக அட்டுறுவாக்கப்பட்ட ரூபா 8,866,549 தொகையான பங்கிலாபக் கொடுப்பனவு காசு பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரி உண்டியல் முதலீடு, முதிர்ச்சி மற்றும் ஊழியர் கடன் வழங்கலுக்கான கொடுப்பனவுக் காசுப் பாய்ச்சல் மற்றும் மீள அறவீடு தொடர்பாக பணம் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான பெறுனவுகள் மற்றும் பயன்பாடுகள் வெவ்வேறாக காண்பிப்பதற்குப் பதிலாக தேறிய காசுப்பாய்ச்சல் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நிதிச் செயற்பாடுகளில் காண்பிக்கப்பட்டுள்ள பங்களிப்புக் கணக்கில் உள்ளபடியான காசுப் பாய்ச்சல் ரூபா 19,125,108 தொகையாகவும் காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 25,553,417 ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டில் ரூபா 115,122,702 தொகை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 101,461,634 பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் முதிர்ச்சியடைந்திருந்தன. முதிர்ச்சியடைந்த மற்றும் முதலீடு செய்யப்பட்ட உண்டியல்களிலிருந்து ஆண்டிற்குரிய ரூபா 9,924,467 ஆன வட்டி வருமானமொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை. இவ்வட்டி அடிப்படையில் செலுத்தப்பட்ட நிறுத்தி வைத்தல் வரி கழித்தலொன்று இடம்பெறாதிருக்கையில் வரியாக ரூபா 991,526 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு குறைப்பதற்கான காரணங்களுக்கான எதுவித மூலாதாரப் பதிவேடொன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் IV ஆம் பிரிவின் (2) ஆம் பந்தியில் சேமலாப நிதியத்திற்காக பொதுக் கணக்கொன்றும் ஒவ்வொரு பங்களிப்பாளருக்கும் வெவ்வேறு கணக்குகளும் பேணிச் செல்லப்பட வேண்டிய போதிலும், சேமலாப நிதியத்தின் பொதுப் பேரேட்டினுள் சேவை ஊழியர்களாக 2 பொது பங்களிப்புக் கணக்குகளும் உப பேரேட்டில் சேவை ஊழியர்களாக 2 கணக்குகளும் பேணப்பட்டிருந்தன. இவ்வாறு பங்களிப்புக் கணக்குகள் 2 பகுதிகளாக பேணிச் செல்வதன் தேவைப்பாடு கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்படாதிருந்ததுடன், இவ்வாறான வகைப்படுத்தலில் நிதிக்கூற்றுக்களைப் பயன்படுத்துவோருக்கு சேமலாப நிதியத்தினுள் ஊழியர்களுக்கு உரித்துக் காணப்படுகின்றது என்ற தவறான கருத்தொன்று ஏற்படக்கூடுமென அவதானிக்கப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 9,854,467 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 10,077,969 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் வீழ்ச்சி ரூபா 223,502 ஆக இருந்தது. நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்காக திறைசேரி உண்டியல்களிற்கான வட்டி வருமானம் ரூபா 302,794 ஆல் குறைவடந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாடு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்தின் ஊழியர் சேமலாப நிதியம், நிரந்தர ஊழியர்களின் மாதாந்த உழைப்புக்களிலிருந்து அறவிடப்படுகின்ற 10 சதவீத பங்களிப்புத் தொகையையும் பல்கலைக்கழகத்தின் மூலம் அந்த உழைப்புக்கள் மீது செலுத்தப்படுகின்ற 15 சதவீத பங்களிப்புத் தொகையையும் கொண்டிருந்தது. அப்பணத்தை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்தல் மற்றும் ஊழியர் கடன் வழங்குவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. நிதியத்தின் பங்களிப்புக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்ட வட்டி மீளாய்வாண்டில் ரூபா 8,866,549 தொகையாக

இருந்ததுடன், முன்னைய ஆண்டில் அது ரூபா 9,065,820 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் வட்டி 2.2 சதவீத அளவிலான வீழ்ச்சியினைக் காண்பித்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் கட்டுப்பாட்டுச் சபையினால் நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் வினவி, அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டு வட்டி தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்காக உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் ஆண்டின் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு 8.11 சதவீத வட்டி தீர்மானிக்கப்பட்டு ரூபா 8,866,549 தொகை பங்களிப்புக் கணக்ககளுக்கிடையே பகிரப்பட்டிருந்தது.

(ஆ) சேமலாப நிதியத்தின் பங்களிப்புக் கணக்கில் உள்ள மீதிகளுக்குரிய பங்களிப்பாளரின் அல்லது வாரிசுகளின் விண்ணப்பமொன்று இல்லாமல் மூடப்படாமல் இருக்க வேண்டியதுடன், சேமலாப நிதியத்தின் மீதி அடிப்படையில் அதனை அகற்றிக் கொள்ளும் வரை வட்டி செலுத்தப்பட வேண்டும். எனினும் ஒழுக்காற்று அடிப்படையில் பல்கலைக்கழகத்திலிருந்து விலகி தொழில் நியாய சபையில் வழக்குகள் தொடரப்பட்டுள்ள இரண்டு உத்தியோகத்தர்களின் வேண்டுகோளின்றி ஊழியர் சேமலாப நிதியத்தின் கணக்குகள் மூடப்பட்டு வருடக்கணக்காக அம்மீதியிலிருந்து வட்டி கணிப்பிடப்படாமல் அவர்களுக்குரிய வட்டி ஏனைய கணக்கு உரித்தாளிகளுக்கு செலவு வைக்கப்படும் வகையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. (விபரங்கள் பின்வருமாறு)

| வட்டி கணிப்பிடப்பட வேண்டிய கணக்கு மீதி | இறுதியாக வட்டி செலவு வைக்கப்பட்ட ஆண்டு | ஊ.ந.நி.. விண்ணப்பித்த திகதி | வட்டி கணிப்பிடப் படாத ஆண்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (ரூபா) | | | |
| 470,841 | 2004 | 2014.09.01 | 10 |
| 396,543 | 2008 | விண்ணப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 6 |

(இ) சேமலாப நிதியத்தில் ஆண்டின் இறுதியில் பங்களிப்பு அடிப்படையில் பங்குலாபத்தை பகிர்ந்தளித்தல் பொது முறையாக இருப்பதால் நிதியத்தின் கணக்கு உரித்தாளர்களுக்கு நடப்பாண்டின் பங்களிப்பிற்காக பங்கிலாபம் உரித்தாதல் வேண்டும். எனினும் 2014 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட 23 புதிய உறுப்பினர்களின் ரூபா 1,394,738 கூட்டுத்தொகையான பங்களிப்புத் தொகைக்காக எதுவித பங்குலாபமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு நடப்பாண்டின் பங்களிப்பிற்காக இரண்டு விதத்தில் பங்குலாபத்தை அட்டுறுவாக செலுத்துவதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்படவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது சங்கைக்குரிய மஹோபாத்தியாயரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(ஆ) முதலீடு மற்றும் முதலீட்டு வருமான நிர்வாகம்
(ஆ) கடன் மற்றும் முற்பணக் கட்டுப்பாடு
(இ) பங்களிப்புக் கணக்கு கட்டுப்பாடு